# அன்பின் வழியது உயிர்நிலை!

அன்பால் உலகை அணைத்திடுவோம்!
ஆனந்த வாழ்வை நாம் பெறுவோம்!
இகத்தின் துன்பங்கள் நீங்கிடவே நாம்,
ஈடில்லா பெருமைகள் கொண்டெழுவோம்!

உலகெலாம் நிறையும் அன்பின் வழி!
ஊமையாயிடும் இனி தீக்குணங்கள்!
எல்லா உயிர்களும் நம் உறவாம்!
ஏற்றமே அன்பின் அடித்தளமாம்!

ஐயன் வள்ளுவன் வழி நடப்போம்!
ஒற்றுமை நமது விடிவெள்ளி!
ஓங்கார மென்பது உலகொலியே!
ஔவையின் தமிழும் அறமாகும்!

அஃதும் வாழ்வில் ஒளியேற்றும்!
கயமை இன்றி மனம் நெய்க!
காலம் நமது கையில் வரும்!
கிழக்கின் ஒளியாய் எழுந்திருந்து,

கீழ்மைகள் தன்னைக் களைந்திடுவோம்!
குற்றம் இல்லா மனம் கொள்வோம்!
கூடிய நன்மைகள் அடைந்திடுவோம்!
கெட்டவை யாவும் நீங்கிவே,

கேடில்லா நிலையை அடைந்திடுவோம்!
கைகளை இணைத்தே உயர்ந்திடுவோம்!
கொரோணா பூச்சியை ஒழித்திங்கு,
கோடியாம் இறப்பைத் தவிர்த்திடுவோம்!

சங்கடம் என்பதும் இனியில்லை!
சாதிக்க வழிகள் பலஉண்டு!
சிந்தனை தனையும் செப்பனிட,
சீரிய வழிகள் தாம் பிறக்கும்!

சுகமாய் காண்போம் வாழ்வியலை
சூடிய வழியில் தாம் நிறைந்தே!
செவ்விய சிந்தையே அறமாகும்!
சேர்ந்திட கரங்கள் வளம் சேர்க்கும்!

சொந்தமாய் யாவையும் கண்டிட்டால்,
சோதனை என்பது நமக்கில்லை!
ஞாயிற்றின் ஒளியே உய்விக்கும்!
தகுதி என்பதை மனம் சேர்க்கும்!

தாங்கிய உறவுகள் பலம் சேர்க்கும்!
திவ்வியமாக நாள் பிறக்க,
தீங்குகள் அழிந்த நிலை கொடுக்கும்!
துணையாய் பலரும் வந்திடவே,

தூனாய் துயர்கள் அகன்றிடுமே!
தெய்வம் என்பதும் ஒன்றேதான்!
தேடிய வழிகளில் நாம் காண்போம்!
தையல் என்பதும் இணைப்பதுவாம்!

தொல்லைகள் இன்றி வாழ்ந்திடவே!
தோன்றிடும் பலப்பல வழிமுறைகள்!
நன்மை என்பதை நாம் சேர்க்க,
நானிலம் முழுதும் ஒளிபிறக்கும்!

நித்திலம் போலே மனம் செய்ய,
நீதியின் குரல்கள் காதில் விழும்!
நுடமாய்ச் சிந்தையை நிறுத்தாமல்,
நூதன வழியில் மனம் தொடுப்போம்!

நெஞ்சில் பிறக்கும் கனவெல்லாம்,
நேரிய வழியில் மலர்ந்திடுமே!
நொடியில் துன்பங்கள் விலகிடவே,
நோய்கள் இல்லா வாழ்வுதரும்!

பண்பில் நாமே மேண்மக்கள்!
பாரினில் நாமே பெருநிதியாம்!
புன்னகை என்பது இயல் வழியே!
பூவாய் மனத்தைத் தான் திருத்தும்!

பெரியன என்பது மனக் கோலம்!
பேரின்பம் என்பது தனிவழியாம்!
பைந்தமிழ் போலே நிறைந்திடுவோம்!
பொங்கும் காவிரிப் புதுப் புனலாய்;

போயிடும் துன்பங்கள் நமை விட்டே!
மனமே அறிவின் அச்சாணி,
மாண்புகளால் அதைச் செய்வோம்!
மிச்சம் இன்றித் தீமைகளை,

மீட்டு மனிதம் காத்திடுவோம்!
முயற்சி என்பதே செயலாக்கம்,
மூடமை இல்லா வழிநிலையில்!
மென்மை என்பது அன்பின்வழி,

மேன்மை என்பது அறிவின் நிலை!
மையிருள் நீக்கி அறிவிடவே,
மொழிபவை யாவும் நலமாக;
மோதல் இல்லா வாழ்விருக்கும்!

யாவரும் அன்பால் இணைந்திருக்க,
வரம்புகள் இன்றி மனம் மகிழும்!
வான்மழை பொழிய வளம் சேரும்!
வினைகள் இல்லா செயலிருக்க,

வீணான துன்பங்கள் நமக்கில்லை!
வெண்மைப் பூவாய் மனம் நிறைய,
வேற்றுமை யாவும் அகன்றுவிடும்!
வையகம் முழுதும் சிறந்தேகும்!

**கவிவளவன்** 29-05-2021(10.30.PM)